

# “அண்ணாவின் மரபை கழகத் தலைவர் தொடர்கிறார்!”

**கழக இளைஞர் அணி நடத்திய, ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் நான்காவது அமர்வுக்குத் தலைமையேற்று, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் ஆற்றிய உரை :**



**ஆர்.எஸ்.பாரதி**
**கழக அமைப்புச் செயலாளர்**

“1957-ஆம் ஆண்டு கழகம் முதன்முதலில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது, 15 பேர் வெற்றிபெற்றார்கள். அடுத்து நடந்த 1962 தேர்தலில், அந்த 15 பேரும் வெல்லக் கூடாது என்று நம்மை எதிர்த்து நின்றவர்கள் பல வேலைகளைச் செய்தார்கள். 1957-இல் வென்ற 15 பேரில், 1962-இல் வென்ற ஒரே ஒருவர், முத்தமிழறிஞர் கலைஞர் மட்டும்தான். வெற்றிவாய்ப்பை இழந்த 14 பேரில் அறிஞர் அண்ணாவும் ஒருவர்.

### அண்ணாவின் குரல்

வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம், சென்னை கடற்கரையில் நடைபெற்றது. அண்ணாவும் ஏனைய 14 உறுப்பினர்களும் தோற்றுவிட்டாலும், தமிழ்நாட்டு மக்கள் 50 பேரை சட்டமன்றத்துக்கு தி.மு.க. சார்பில் அனுப்பிவைத்தார்கள். அப்போது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், கழகத்தின் பொருளாளர். அந்தக் கடற்கரை கூட்டத்தில் கலைஞர் பேசுகிறபோது, ‘அண்ணா சட்டமன்றத்துக்கு வரக் கூடாது என்றுதானே திட்டமிட்டு தோற்கடித்தீர்கள். ஆனால், இதுவரையில் தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் ஒலித்த அண்ணாவின் குரல் இனிமேல் டெல்லி மாநிலங்களவையில் ஒலிக்கும்’ என்று சொல்லி அந்தக் கூட்டத்திலேயே அண்ணாவின் பெயரை ராஜ்யசபாவுக்கு முன்மொழிந்தவர், நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதற்குப் பிறகு, மாநிலங்களவைக்கு அண்ணா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டத்தில் வந்தால், அண்ணா எங்கே என்று தேடிப் பிடிக்க வேண்டும். அந்த அளவுக்கு தோற்றத்தில் எளிமையானவர் அவர். அப்படிப்பட்டவர் டெல்லி மாநிலங்களவைக்குச் சென்றார். நாங்கள் எல்லாம் மாநிலங்களவையில் உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறோம். அந்த அவை என்பது மிகப் பெரிய பணம் படைத்தவர்கள், ஜாம்பவான்கள் எல்லாம் அமர்ந்திருக்கிற ஒரு மாபெரும் சபை. அந்த அவையில் அண்ணா அவர்கள் 1962-இல் சென்றபோது, அவரை ஏளனமாக எல்லோரும் பார்த்தார்கள்.

### மாநிலங்களவை அதிர்ந்தது

ஆனால், அண்ணாவின் கன்னிப்பேச்சால் அந்த மாநிலங்களவையே அதிர்ந்துபோனது. முதல் நாள் அண்ணா பேசியபோது, அன்றைய பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், ஓய்வெடுக்கச் சென்றிருந்தார். இப்போது உள்ள மாநிலங்களவை உறுப்பினருக்குக்கூட மூன்று நிமிடங்கள் அல்லது ஐந்து நிமிடங்கள்தான் கொடுப்பார்கள். அதேபோல் அண்ணாவுக்கும் மூன்று நிமிடங்கள்தான் கொடுத்தார்கள்.

### இந்தியாவிலேயே முதலிடம்

அன்றைக்கு மாநிலங்களவையின் துணைத் தலைவராக இருந்தவர், கர்நாடகாவைச் சேர்ந்த வைலட் ஹரி ஹால்வா என்ற காங்கிரஸ் எம்.பி., அண்ணா அவர்கள் ‘திராவிட நாடு ஏன் வேண்டும்’ என்று பேசிய பேச்சில் மயங்கிவிட்டார். மூன்று நிமிடங்களுக்குப் பதிலாக அண்ணா 10 நிமிடங்கள் பேசிவிட்டார். அதற்குப் பிறகுதான் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ‘நேரமாகிவிட்டது’ என்று சொல்லிவிட்டு, மேலும் அண்ணாவைப் பேசச் சொன்னார். ‘கேரி ஆன், பட் ரிமெம்பர்’, ‘தொடர்ந்து பேசுங்கள். ஆனால், திராவிட நாடு பிரிவினை பற்றிப் பேசாதீர்கள்’ என்றார். ஓய்வெடுத்துக்கொண்டிருந்த நேரு, அண்ணாவின் பேச்சைக் கேட்க மாநிலங்களவைக்கு வந்தபோதுதான் அண்ணா, ‘I Belong to Dravidian Stock’ என்றார்.

அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் ‘I Belong to Dravidian Stock’ என்று சொன்னதை இன்றைக்கும் நிரூபித்துக்கொண்டிருக்கிற ஒரே தலைவர், நம் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டை ஏளனமாகப் பார்த்தவர்கள் எல்லாம், தலைவர் தளபதி ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்று விளங்கிய பிறகு, தங்கள் பார்வையை மாற்றிக்கொண்டார்கள். நம்முடைய அண்ணா ஒரு காலத்தில் ‘வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது’ என்று சொன்னார்.

ஆனால், அந்தத் தெற்கில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதலிடத்துக்குக் கொண்டு வந்த தலைவர்தான் நம்முடைய தலைவர் தளபதி.

அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் இந்தியை எதிர்த்துப் பேசுகிறபோது, ஒருவர் அண்ணாவைப் பார்த்து, “நீங்கள் 30 நாள்களில் இந்தியைக் கற்றுக்கொள்ளலாம்” என்று சொன்னபோது, அண்ணா அவர்கள், “அதற்கு மேல் அதில் என்ன இருக்கிறது, தெரிந்து கொள்வதற்கு?” என்று பதில் சொன்னார்.

### இருமொழிக் கல்வி

அந்த இந்தி இல்லாத தமிழ்நாட்டில், 1967-இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இங்கு அமுதரசன், மருத்துவர் யாழினி, மருத்துவர் ஹபிசுல்லா அவர்கள் சுட்டிக் காட்டியது போல, இந்த 55 ஆண்டுக் காலம் தமிழ்நாட்டில் இருமொழிக் கல்வியில் படித்தவர்கள்தான், உலகத்தில் அதிகமாக சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். உலகத்தில் அதிகமாக சம்பளம் வாங்கும் சுந்தர் பிச்சை எங்கள் ஆட்சிக் காலத்தில், இந்தத் தமிழ்நாட்டில் படித்தவர் என்பதை இன்றைய இளைஞர்கள் மறந்துவிடக் கூடாது.

ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் உலகத்தில் இருக்கிற அனைத்து நாடுகளிலும் தமிழர்கள் கோலோச்சி இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் படித்தது, அறிவு பெற்றது அத்தனையும் *Dravidian Stock* என்று சொல்லப்படுகிற தலைவர்களால் உருவாக்கப்பட்டவர்கள்.

இன்றைக்கு, பல்வேறு சக்திகள் இந்தத் திராவிட உணர்வுகளை, இந்த *Dravidian Stock*-ஐ ஒழிப்பதற்காகவே தமிழ்நாட்டுக்குள் ஊடுருவி இருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இளைஞர் அணியின் சார்பாக இது போன்று பாசறைகளை நடத்தி, திராவிட இயக்கத்தின் வரலாறுகளை இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்கின்ற ஒரு சிறப்பான விழாவாக அறிவுத் திருவிழா ஒரு வார காலம் நடைபெற விருக்கிறது.

### அறிவுத் திருவிழா

63 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த இயக்கத்தில் பணியாற்றி வருகின்றவன் நான். திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய எத்தனையோ மாநாடுகள், கூட்டங்களைப் பார்த்தவன். இதுவரை கழகம் நடத்திய எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முத்தாய்ப்பு வைத்ததைப் போல், ஒரு வார காலம் தொடர் நிகழ்ச்சியாக, இளைஞர் அணியின் சார்பாக நடத்தப்படும் இந்த அறிவுத் திருவிழா, இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறையாக இருக்கப்போகிறது. தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தை இன்னும் 50 ஆண்டுகளுக்கு வழிநடத்துகிற ஆற்றலும், திறமையும் மிக்க இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.”





## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி ‘அறிவைக் கொண்டாடி, பகுத்தறிவை வளர்க்கும், உரிமைகளைக் கோரும் கொள்கைத் திருவிழா!’ என்ற தலைப்பில், எழுதிய முகநூல் பதிவில் இருந்து...**

தி.மு.க. இளைஞர் அணி நடத்திய அறிவுத் திருவிழா குறித்து மூத்த பத்திரிகையாளர் தராசு ஷ்யாம் அவர்களிடம் ஒரு நேர்காணல் எடுத்திருந்தேன்.

*கேள்வி : “நீண்ட அரசியல் மற்றும் ஊடகவியல் அனுபவம் கொண்ட நீங்கள், இந்த விழாவை எப்படிப் பார்க்கிறீர்கள்?”*

தராசு ஷ்யாம் : “இதுவரை எந்த அரசியல் கட்சியும் இப்படி ஒரு திருவிழாவை, அறிவை மையப்படுத்தி நடத்தியதில்லை. துணை முதல்வர் உதயநிதி அவர்கள் நடத்திய இந்த விழா புதுமையானது. மிக முக்கியமானது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடங்கியதில் இருந்தே, அன்றாடம் அறிவைக் கொண்டாடி வருகிறோம். 2021-இல் எப்போது தி.மு.க. ஆட்சி அமைத்ததோ அப்போதே அறிவுத் திருவிழா தொடங்கிவிட்டது. திருவிழாவுக்கு உரிய வடிவம் கொடுத்து, கலைநிகழ்ச்சிகள், நூல்வெளியீடு, கருத்தரங்குகள், புத்தகக் கண்காட்சி என்று சிறப்பாக வடிவமைத்திருக்கிறார் உதயநிதி. அந்த விழாவில் வெளியிடப்பட்ட ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூலை எனக்கு நேரில் வந்து கொடுத்தார்.

* தி.க. துணைப் பொதுச் செயலாளர் தோழர் மதிவதனி மற்றும் தி.மு.க. செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் தோழர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை வைத்து ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்திருந்தோம். நாங்கள் மூவருமே 25-30 வயதுக்குட்பட்டோர். நாங்கள் மூவருமே ‘இரு வண்ணக் கொடிக்கு வயது 75’ இரண்டு நாள் கருத்தரங்கில் உரையாற்றினோம். அறிவுக்கு முக்கியத்துவம் அளித்து, எங்கள் கருத்துக்கும் உழைப்புக்கும் மதிப்பளித்து, உரிய தலைப்புகளில் அமர்வுகளை அமைத்திருந்தனர். அறிவுத் திருவிழா குறித்த எங்களது விரிவான பார்வையைப் ‘பேரலை’ காணொலியில் பதிவு செய்திருந்தோம். தோழர் சூர்யா தி.மு.க, தோழர் மதி தி.க, நான் ஊடகவியலாளன். மூவரும் அவரவர் தளங்களில் இருந்து ஆய்வு செய்யவும் முன்வைக்கவும் நிறைய செய்திகளைச் சுமந்து நிற்கிறது அறிவுத் திருவிழா.

“தொண்டர்களைப், ‘படியுங்கள்! அனைத்து முற்போக்குப் புத்தகங்களையும் படியுங்கள்’ என்ற அறிவுரையை வேறு எந்தக் கட்சியும் இவ்வளவு சீரியஸாக தன் தொண்டர்களுக்குச் சொன்ன தில்லை. அறிவுத் திருவிழா வாசிப்பையும் கொள்கைத் தெளிவையும் வலியுறுத்திக்கொண்டே இருக்கிறது. அதுவே, உனக்கான வளர்ச்சிப் பாதை என்பதை உணரவைக்கிறது” என்கிறார் தோழர் சூர்யா அவர்கள்.

“மூத்தோர் பேச, இளையோர் கேட்க என்ற மரபை உடைத்து இளையோர் பேச, மூத்தோர் ரசிக்க என்று மாற்றியமைத்துள்ளது அறிவுத் திருவிழா. 75 ஆண்டுகளாகக் காலத்துக்கேற்ற மாற்றங்களைத் தி.மு.க. செய்துகொண்டே இருக்கிறது. ஆனால், கொள்கை உறுதியில் மாறாமல் நிற்கிறது” என்று பெரியாரியப் பார்வையில் அந்த விழாவின் முக்கியத்துவத்தை தோழர் மதிவதனி அவர்கள் விவரிக்கிறார்.